# ஆசிரியர்களுக்கான
# International Computer Driving License (ICDL) / மற்றும் கணனி உதவிக் கற்கை (CAL) 5000 கணனி புலமைப் பரிசில்கள் வழங்கும் வேலைத்திட்டம்

இடைநிலைக் கல்வி முறைமையை நவீனமயப்படுத்தும் வகையில் மாணவர்களுக்காக கணனி உதவி கற்கை முறைகளை அறிமுகப்படுத்துவதற்கென கல்வி அமைச்சினால் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் (ICT) தொடர்பான அடிப்படை பயிற்சி வேலைத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கணனி உதவி கற்கை வேலைத்திட்டம் மூலம் எதிர்கால உலகில் பூரண அறிவு மிக்க மாணவர்களை உருவாக்கும் வகையில் ஆசிரியர்களின் அடிப்படை கணனி அறிவை விருத்திசெய்யும் நோக்கில் இப்புலமைப் பரிசில் வேலைத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கணனி இயலுமையை விருத்திசெய்யும் எதிர்பார்ப்புடன் 5000 கணனி புலமைப்பரிசில்களை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் செயற்றிட்டத்தினூடாக கணனி மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள பாடசாலைகள் மீது விசேட கவனம் செலுத்தப்படும். நாடு பூராகவும் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கணனிக் கற்கை நிறுவனங்கள் மூலம் இவ் **International Computer Driving License (ICDL)** பாடநெறியைக் கற்க முடிவதுடன் பாடநெறியை கற்பதற்காக தேவைப்படும் நிதி உதவியும் பாடநெறிக்கான கையேடுகளும் செயற்றிட்டத்தினூடாக வழங்கப்படும்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளை **International Computer Driving License (ICDL)** பாடநெறியைத் தொடர்வதற்கு பூர்த்திசெய்திருக்க வேண்டியது மிகவும் பொருத்தமானதென கருத்திற்கொள்ளப்படும்.

A. 2006/01/01 தினமன்று 50 வயதை தாண்டாதிருக்க வேண்டும்.
B. பாடசாலையின் இடைநிலைப் பிரிவில் (6-13 தரம்) கற்பித்தல்

குறிப்பு: இதற்கு முன்னர் செயற்றிட்டத்தின் பங்களிப்புடன் அமுல்படுத்தும் 18 நாட்கள் CAL, 10 நாட்கள் GIT மற்றும் ICDL பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக பங்கேற்ற ஆசிரியர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாதென்பதை தயவாய் கருத்திற்கொள்ளவும்.

சகல விண்ணப்பதாரர்களும் அதிபரூடாக தமது சுயவிபரம் மற்றும் இதற்கு முன்னர் 18 நாட்கள் CAL, 10 நாட்கள் GIT, அல்லது ICDL பாடநெறியை தொடரவில்லை என்பதை உறுதிசெய்து 2006 மே 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தை அனுப்பவேண்டியதுடன் தங்களுக்கு மிகவும் வசதியான அண்மித்த கற்கை நிறுவனத்தை அதில் குறிப்பிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். இப்பாடநெறியை நடாத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்ப்பட்டியல் கல்வி அமைச்சின் இணையத்தளமான www.moe.gov.lk இல் வெளியிடப்பட்டுள்ளது.

முகவரி:
செயற்றிட்டப் பணிப்பாளர்,
இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்றிட்டம்,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.

கணனி புலமைப் பரிசில் வேலைத்திட்டம் தொடர்பாக மேலதிக விபரங்களுக்காக தொலைபேசி இலக்கம் (001) 2787059 மற்றும் மின்னஞ்சல் (ஈ-மெயில்) semped@sltnet.lk ஐ பயன்படுத்த முடியும்.

ஆரியரத்ன ஹேவகே
செயலாளர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.

Ministry of Education | ADB Asian Development Bank | SEMP SECONDARY EDUCATION MODERNIZATION PROJECT - II

இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்றிட்டம் - II

கல்வி அமைச்சு